# அறவழி
## NONVIOLENCE

▶ வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு

அஞ்சல் பெட்டி எண்:2
சாவகச்சேரி
(N. V. D. A. G.)

அறம் 1 மாத இதழ் ✻ 1987 ஆடி பக்கம் 12 ✻ விலை 2-00 வழி 14

# தமிழர்களை காப்பாற்றுங்கள்!

## காந்திதேச அதிகாரிகளிடம்
## தமிழ் மக்கள் கண்ணீரால் முறைப்பாடு!

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில் பசியாலும், பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கு உணவு, மற்றும் மருந்துவகைகளை நேரடியாகக் கையளிப்பதற்கென பாரததேசத்தின் அதிகாரிகள் தமிழ் மண்ணிற்கு வருகை தந்தார்கள்.

உணவு மற்றும் மருந்துப் பொருட்களுடன் யாழ் குடாநாடு வந்தடைந்த அதிகாரிகளுக்கு லட்சோப லட்சம் மக்கள், வீதிகளெங்கும் திரண்டு நின்று வரவேற்பு அளித்தனர். உரிய நேரத்தில் உதவியுடன் வந்த சாந்தி தேசத்தவர்களை தமிழ் மக்கள் நெஞ்சார வாழ்த்தினர்,

''தமிழ்மக்கள் தமது சொந்த மண்ணிலேயே பாதுகாப்பாக வாழமுடியவில்லை. அழிவில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றுங்கள்'' என்ற கோஷங்கள் வானளாவியது.

தமிழ் மண்ணில் தமிழ் மக்கள் தினம் தினம் அனுபவிக்கின்ற துன்பங்களையும், துயரங்களையும் கண்டுகொண்ட காந்தி தேச அதிகாரிகள், தமிழ்மக்களின் நீண்டகால துன்பத்துக்கு மிக விரைவில் நிம்மதி கிட்டும் என ஆறுதல் அளித்தனர்.

தவித்துக்கொண்டிருக்கும் தமிழ்மக்களுக்குத் தக்க தருணத்தில் உதவி வழங்க முன்வந்த காந்திதேச அரசுக்கும், மக்களுக்கும் தமிழ் மக்கள் என்றும் நன்றிக்கடனாக இருப்பார்கள் என்பதைத் தமிழ் நெஞ்சங்கள் விசுவாச உணர்வுடன் காட்டிவிட்டன.

---

### சமுதாய நன்மை கருதி இவற்றைத் தவிர்ப்போம்!

- பொய், வதந்தி பரப்புதல்
- காட்டிக் கொடுத்தல்
- சமூக விரோதச் செயல்கள்
- சாதி பார்த்தல்
- பாவனைப் பொருட்களை பதுக்கல்
- கள்ளச் சந்தையை உருவாக்கல்
- பயப்பிராந்தியைத் தோற்றுவித்தல்
- களவுகளில் ஈடுபடுதல்
- பொதுச் சொத்துக்களை அபகரித்தல்
- கொள்ளை லாபம் பெறுதல்
- நாட்டை விட்டு ஓடுதல்
- மக்களை ஏமாற்றுதல்.

---

## காந்திதேசத்தின் மனிதநேய உதவிக்கு எம்நன்றிகள்!

# அறநோக்கில்

## புதிய அத்தியாயத்தை முன்னேக்கி!

உலகிலேயே மிகக்கொடிய இராணுவமாகக் கருதம்படுகின்ற ஸ்ரீலங்கா இராணுவத்தின் அநாகரிகமான செயல்களால். தமிழ் சமுதாயம் அழிவு நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

தினம்—தினம்—கொலைகள்!

பொருட்கள் சூறையாடல்!

இளம்பெண்கள் கற்பழிப்பு

தமிழ் இளைஞர்களை கைது! சித்திரவதை!

தமிழ் மக்கள் தம் சொந்த மண்ணிலேயே அகதிகள்!

தமிழனின் உடைமைகள் நாசகாரம்!

யாழ். குடாநாட்டில் வாழ்கின்ற மக்கள் பயப்பிராந்தியுடன், நிம்மதியற்று, அடுத்து என்ன நடக்குமோ? என்ற அச்ச உணர்வில் வானத்தைப் பார்த்து வாழ்கின்றனர்.

நிம்மதியாக எங்குமே சென்றுவர முடியாத நிலை!

தமிழ் மக்களின் பொருளாதாரம்—கல்வி—கலாசாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது;

உலக சமுதாயத்தில் தமிழன் என்று ஒரு இனம் இருக்கவேகூடாது என்ற எண்ணம் கொண்டு ஆட்சியாளர் செயற்பட்டுக்கொள்கின்றனர்.

புத்தபெருமான் வன்செயலை, கொலையை கொள்ளையை, கற்பழிப்பை, மனித அழிவை அடியோடு வெறுத்தார்! உலகில் சமாதானம், சாந்தி ஏற்படப் பாடுபட்டார்.

புத்தபெருமானின் ஆதிபத்திய சீடர்கள் எனத் தம்மை பிரகடனப்படுத்திக்கொள்கின்ற ஆட்சியாளர்களோ தம் சொந்த நாட்டில் இருக்கின்ற தமிழ் மக்களுக்கு இழைக்கின்ற கொடுமைகள் சொல்லும் தரமன்று!

வெட்ட—வெட்ட—செழித்து வளர்கின்ற மரம் போல்!

தமிழனை—அழிக்க—அழிக்க, தமிழன் சீரும்—சிறப்பும்—பெற்று ஈற்றில் வெற்றி முரசுகொட்டி—வெற்றிக்கொடி நாட்டி—சாதனை படைப்பதில் வல்லமை கொண்டவன் என்பதை அநாகரிக ஆட்சியாளர்கள் அறியத் தவறிவிட்டார்கள்! 1958 முதல், கட்டம் கட்டமாகத் தமிழன் இந்த நாட்டில் பேரினவாத அரசுகளால் அழிக்கப்பட்டே வருகின்முன்.

ஆனலும்கூட, தமிழனின் பெருமை—சிறப்பு—தொன்மை — மழுங்கடிக்கப்படவில்லை. தமிழனின் சிறப்புகள், வீரங்கள், பெருமைகள்—வளர்ச்சிகள் சங்கிலித்தொடர்போல வளர்ந்துகொண்டே போகும்,

இவை வரலாறு காட்டும் உண்மைகள்!

தமிழ் சமுதாயதைச் சூழ்ந்திருக்கும் இருள் நிச்சயமாக நிரக்தரமானதல்ல;

இந்தக்கரிய இருள் சமுதாயத்தைவிட்டு அகலும் காலம் அண்மித்துக்கொண்டிருக்கின்றது.

கடந்தகால இழப்புகள், அழிவுகள். துன்பங்கள், நஷ்டங்கள் பற்றிக் கணக்குப்போட்டுப் பார்க்கும் நிலையை மாற்றிக்கொண்டு, எமது தமிழ் சமுதாயத்தின் உயர்ச்சி நிலைக்கும், வளர்ச்சிக்கும், திட்டமிட்டு, சமுதாய விசுவாச உணர்வுடன் ஒவ்வொரு தமிழ் பிரஜையும் செயற்படவேண்டியது மிக, மிக அவசியமாகிவிட்டது.

எனவே, எதிர்கால தமிழ் சமுதாயத்தின் நல்நோக்குக் கருதி. புதிய அத்தியாயத்தை முன்னேக்கி எம் செயற்பாடுகளை முன்னெடுப்போம்!

நாளைய எமது சமுதாயம் நன்றே வளர இன்றே எம்பணியைத் தொடர்வோம்!

---

## மானுட நேயம்

மனிதன் மனிதனுக வாழ்ந்திட
மனிதத்துவம் மண்ணில் நிலேத்திட
மானிலம் வாழ் அனைத்து
மானுடர்தம் உரிமைதனைப் பெற்றிட

ஏழைபணக் காரன் என
வாழையடி வாழையாகத் தொடரும்
வழக்கம் இல்லா தொழிந்து ஓர்
உன்னத சமுதாயம் உதித்திட

உள்ளது அனைத்தையும் பகிர்ந்து
எள்ளளவே யாயினும் உண்டிட
கள்ளம் இல்லா நெஞ்சுடனே
கனிவு கொண்டே அனைவரையும்

அன்பு அகிம்சை எளிமை—என்றே
அண்ணல் காந்தி காட்டிய
புனித அறவழி மார்க்கம்—நின்றே
மானுடத்தை நேசி நெஞ்சே!

—பூவை

ஊரெழு,

# 10,000 தமிழ் இளைஞர்களில் 4000 பேர் தடுப்பு முகாமில்

## வல்வை நிலைமைபற்றி லண்டன் பத்திரிகை

இலங்கை அரசாங்கம் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருப்பதாகக் கூறப்படும் பகுதிகளில் ஆயுதப்படைகளால் கைதுசெய்யப்பட்ட 10 ஆயிரம்பேரில் 4 ஆயிரம் பேர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று 'சண்டே டைம்ஸ்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுவிக்கப்படாமலிருக்கும் இக்த இளைஞர்சுள் தென்னிலங்கையிலுள்ள முகாம் ஒன்றுக்குக் கொண்டு போகப்படவிருப்பதாகவும் அங்கே அவர்கள் முள்ளுக் கம்பி வேலிகளால் தடுத்துவைக்கப்படவிருப்பதாகவும் அப்பத்திரிகை எழுதியுள்ளது.

குறிப்பிட்ட பிரதேசத்தை இலங்கை ராணுவம் தாக்கியதையடுத்து அப்பகுதி மக்கள் தமது இளைஞர் சமுதாயம் முழுக்கவும் இழந்துவிட்டது என அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அப்பகுதிக்குள் ராணுவம் புகுந்தவுடன் ராணுவத்தினர் நகரைச் சுற்றிவளைத்து ஒரு கோயிலில் ஆண்கள் பெண்கள் ருழந்தைகள் அனைவரையும் சுட்டுத்தள்ளினுர்கள் என்றும்; பின்னர் 18 வயதுக்கும், 35 வயதுக்கும் உட்பட்ட அனைவரையும் கொண்டு சென்றனர் என்றும் அப்பத்திரிகை எழுதியுள்ளது.

வல்வெட்டித்துறை நகருக்குள் ராணுவம் நுழைவதற்கு முன்பதாக ராணுவ விமானங்கள் நகரில் குண்டுவீசி தாக்கியதுடன் ஹெலிகாப்டர்களும் துப்பாக்கிச்சூட்டில் இறங்கியதாகவும் 'லண்டன் டைம்ஸ்' எழுதியுள்ளது.

வீடுகள் பலவும் நொருக்கப்பட்டுவிட்டன. குடி தண்ணீருக்கும் மின்சாரத்திற்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அப்பத்திரிகை 4 ஆயிரம் இளைஞர்களைத் தடுத்து வைத்திருப்பதானது இலங்கை அரசுக்கும் தமிழருக்குமிடையில் மீண்டும் நட்புறவு ஏற்படுவதில் பெரும்தடைக் கல்லாக இருக்கப்போகிறது எனவும் குறிப்பிட்டுள்ளது.

## வருந்துகிறோம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த மாதம் நிலவிய பதட்டநிலை, மக்கள் இடம்பெயர்வு, பொதுஸ்தாபனங்கள் செயலிழப்பு காரணமாக அறவழிப் பத்திரிகையையும் வெளியிடமுடியாதளவு தடங்கல்கள் ஏற்பட்டமைக்காக வருந்துகிறோம்.

இருப்பினுங்கூட அறவழி சந்தாதாரர்களுக்கும் எமது விசேட வெளியீடுகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டன.

ஆசிரியர்.

## பயணமானுர்



சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் உபதலைவரும், முழுநேர ஊழியரும், அறவழிப் பத்திரிகையின் குழு உறுப்பினருமான திரு. சண். காளிதாஸ் இம்மாதம் இந்தியாவிலும், பங்களாதேஸிலும் நடைபெறவுள்ள கருத்தரங்குகள், பயிற்சிமுகாம்களில் பங்குகொள்ளும் பொருட்டு இந்தியா பயணமானுர்.

இவ்விருநாடுகளிலும் தொண்டர் ஸ்தாபனங்களினுல் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களையும் பார்வையிடுவார்.

இந்தியாவில் கிராமிய மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் நூலகத் திட்டங்கங்களையும் இவர் பார்வையிடுவார்.

திரு. சண். காளிதாஸின் பயணம் வெற்றிகரமானதாக அமைய வாழ்த்துகின்றோம்.

(ஆ—ர்)

## நிவாரண உதவி வழங்கப்பட்டது

கடந்தமாதம் யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற அனர்த்தங்கள் காரணமாக வடமராட்சி, அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் அகதிகளாக தஞ்சம் அடைந்திருக்கும் குடும்பங்களின் குழந்தைகளுக்கான பால்மா உணவுவகைகளை அறவழிப் போராட்டக் குழு வழங்கியது.

தென்மராட்சிப் பகுதியில் பதினைந்து அகதிகள் முகாம்கள் நடாத்தப்படுகின்றன, வடமராட்சிப் பகுதியில் அறவழிப் போராட்டக்குழுவினுல் நடாத்தப்படுகின்ற எட்டுப்பாலர் பாடசாலைகளிலும் கல்விபயிலுகின்ற சுமார் 250 சிறுவர்களின் குடும்பங்களுக்கு குழு ஒரு வாரகாலத்திற்கான உணவுப் பொருட்களை வழங்கியுள்ளது.

# சமயமும் அரசியலும்

காந்தியடிகள் சமயத்தையும் அரசியலையும் இணைத்துக் குழப்புகிறார் என்று அநேகர் கூறிவந்தனர். காந்திஜீயை அரசியல் தலைவராக ஏற்றுக்கொண்டவர்களே அவர் சமயத்தை அரசியலில் கலந்ததை விரும்பவில்லை. பின் சமயவாதிகளைக் கேட்பானேன். இன்றும்கூட காந்தியடிகளைப் பின்பற்றுகிறோம் என்பவர்களில் பலர் பிறராறிய சமயத் தேவையையும் காந்திஜீயின் சமய அடிப்படையையும் ஒத்துக்கொள்வதில்லை. அதனால் அவர்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படுவதாக அதாவது காந்தியடிகளை பூரணமாகப் பின்பற்றுவதற்கு அதை ஒத்துக்கொள்வது மிகவும் தேவை என்பதாக தோன்றவில்லை.

காந்தி அடிகளின் அரசியலானது தொண்டு அரசியல். தன்னை மக்களின் முழுநேர ஊழியனாக மாற்றிக்கொண்ட அரசியல். மனித வாழ்வின் இலக்கை அடைவதற்குப் பாதையாக ஏற்றுக்கொண்ட அரசியல். அதேபோல சமயம் என்பது வாழ்க்கையைப் பொருளும் ஆழமும், மகிழ்ச்சியும் நிறைவும் கொண்டதாக ஆக்கிக்கொள்ளவும் பிறகு நற்கதியை அடையச் சாதனமாகவும் ஆக்குவதற்கான விஞ்ஞானம். இவ்விரண்டையும் புரிந்துகொள்ளாதவர்களே இவ்விதம் பேசுகின்றனர். அவர்கள் அரசியலைச் சுயநலந்தேடும் சாதனமாகக் கொள்கின்றவர்கள். சமயம் அவர்களுக்கு கொஞ்சம் இடிக்கவே செய்யும். அரசியல் கருவிதான் முடிவு அல்ல என்ற வகையில் அரசியலில் ஈடுபடாமல் அதுவே எல்லாம் என்று கருதி அரசியலில் செயலாற்றுபவர்களுக்கு சமயத்தின் தேவை புரியவில்லை என்றால் அதிசயம் இல்லை.

நம் நாட்டில் கிருஷ்ணபகவான் உதாரணம் இருக்கிறது. கீதையை உபதேசித்தவரும் அவரே. இந்தியாவின் அன்றைய அரசியலை நிர்ணயித்தவரும் அவரே அவர் இரண்டையும் தனித்தனி வைக்கவில்லை. என் சம்பந்தப்பட்ட வரையில் சமயத்தொடர்பற்ற அரசியல் இல்லை என்பது காந்திஜீயின் கூற்று. அவர் சம்பந்தப்பட்டவரை என்ன, யார் சம்பந்தப்பட்டவரையும் அதேதான். மதங்களுக்குத்தான் சாம்ராஜ்யங்கள் எழும்பின. அவற்றின் காரணமாகவே சாம்ராஜ்யங்கள் அழிந்தன. எனவே மீண்டும் கேள்வி எழும். பின் ஏன் அரசியலில் இருந்து மகத்தை ஒதுக்கிவிட்டு அதன்மூலம் அறிவையும் தவிர்க்கக் கூடாது என்று.

காரணம் இதுதான். சமயத்தொடர்புள்ள அரசியல் நாசம் செய்தபோது அரசியல் தன் நாசவேலைகளுக்கு சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டது என்பதுதான் உண்மை; சமயம் அரசியலை பயன்படுத்திக்கொண்டால் இது தவிர்க்கப்படும். தெளிவாகச்சொன்னால் ஒளியில்லாமல் எந்த செயலும் செய்யமுடியாது. அதைப் பயன்படுத்துகிறவன் தவறான காரியத்திற்கு பயன்கொண்டதால் ஒளியை நாமும் ஒதுக்கமுடியாது. காந்தி அடிகளின் சமயம் மூடநம்பிக்கையுடன் போராடிய சமயமல்ல. துவேசங்களையும் போராட்டங்களையும் அடிப்படையாகக்கொண்ட சமயமும் அல்ல. ஆனால் சகிப்புத்தன்மையை அடிப்படையாகக்கொண்ட அகில உலக சமயமாகும். அரசியலில் ஒழுக்கமும் சகிப்புத்தன்மையும், நேர்மையும் அன்பும் வேண்டாமா? இவை அரசியலில் காணப்படாமல் இருக்கிறது என்பது சில நேரங்களில் அல்லது சில இடங்களில் உண்மையாக இருக்கலாம். அதனால்தான் அது கெட்டது என்பதிலும் ஐயமில்லை,

சிறந்த சமய அடிப்படையின்றேல் அரசியல் கல்வி முற்றிலும் தகுதியற்றதாகிவிடும் என்பதே எனது அபிப்பிராயமாகும் என்று அவர் காட்டும் காரணம் அரசியலிலும் மனிதனால் நடாத்தப்படுவதே அவன் சரியாக இல்லாவிட்டால் சரியான அரசியல் எப்படி உருவாகும் என்பது தான் குடித்தனம் நடத்த ஆரோக்கியமான உடல்எதற்கு என்று சொல்வது போலாகும். சமயப்பற்று இல்லாத மனிதன் வேர் இல்லா மரத்துக்குச் சமமாவான். ஆகையால் சமயத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் வாழ்க்கை அமைப்ப உருவாக்கப்படவேண்டும். எனவே மனிதன் தான் வாழ சமயத்தைப் பற்றும்போது வாழ்க்கையின் ஒரு அம்சமாக அல்லது முழுமையாக ஏற்றுக்கொண்ட அரசியலை மட்டும் என் சேருக்கவேண்டும் நீராடிவிட்டு சேற்றைப் பூசிக்கொள்ளவேண்டுமா? கோவிலுக்குள் தானம் செய்துவிட்டு கோவிலுக்கு வெளியே ஜேப்படி செய்வது என்ன நியாயம்? அரசியலில் எதுவும் நியாயமாகாது; நியாயமாகக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தியதால்தான் காந்தி அடிகள் அரசியலை சமயத்துக்குள் அடக்கினர்.

பெரிய பெரிய அரசியல்வாதிகள் சமய அறிவும் சமயச்சடங்குகளில் பற்றும் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் அரசியலில் இவற்றை ஒதுக்கிவிடுவார்கள். தனி வாழ்வில் உண்மையும் நேர்மையும் அன்பும் பண்பும் கடவுள் பக்தியும் கொண்டு வாழ்ந்த இவர்கள் அரசியலில் பலாத்காரத்தையும் வஞ்சனையும் ஏற்றார்கள்; வெறுப்பை வளர்த்தார்கள். சமயவாதிகள் அரசியலைவிட்டு ஒதுங்கியே வாழ்ந்தார்கள். அவர்களுக்குக் கோவில்களும் சமய மேடைகளும் நீராடக் குளமும் கிடைத்தால் போதும். மற்றப்படி அவர்களுக்கு யார் ஆண்டாலும் ஒன்றுதான். மக்கள் கஷ்டப்பட்டாலும் சரிதான். அவர்கள் அதிர்ஷ்டம் அவர்கள் தலையின் எழுத்து என்று சொல்லி ஒதுங்கிவிடுவார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

மா நகர சபை
யாழ்ப்பாணம்

# அணுஆயுதமும் சமாதானமும்

—ஜீவகன்

இன்று உலகில் விசேடமாக ஐரோப்பிய மற்றும் வல்லரசு நாடுகளில் அதிகமாக அணுஆயுத தவிர்ப்பு விடயம்பற்றி மிகவும் பரவலாகப் பேசப்பட்டுவருகின்றது. ஐரோப்பிய மற்றும் வல்லரசு நாட்டு அரசாங்கங்களுக்கு இன்று பெரிய தலையிடியை ஏற்படுத்துகின்ற பிரச்சனையாக இருப்பவைகளில் அணுஆயுத தவிர்ப்பு விடயம் அதிமுக்கியமானதொன்றெனக் கூறலாம்.

அந்நாடுகளில் வாழக்கூடிய மக்கள் அணு ஆயுதப்போர்பற்றி அச்சம் பயம் காரணமாக, உலகில் மிக அவசியமாக அணுஆயுதத் தவிர்ப்பு மேற்கொள்ளப்படல்வேண்டும் என பல்வேறுவகையான அறவழிப் போராட்டங்களை அடிக்கடி நடாத்தி வருகின்றனர்.

இதன் காரணமாகவும் அடிக்கடி நடாத்தப்படுகின்ற மாநாடுகள், கருத்தரங்குகள் கூட்டங்கள் தனிச்சந்திப்புக்கள் மூலம் மக்கள் மத்தியில் அணு ஆயுதப்போர் பற்றியும் அதன் விளைவுகள், தாக்கங்கள் பற்றியும் எடுத்துக்கூறி தெளிவு நிலையை ஏற்படுத்தி வருகின்றனர்.

அணுஆயுதத்தவிர்ப்பு பற்றி அமெரிக்கா, சோவியத் ரஷ்யா நாடுகளின் தலைவர்களுக்கிடையில் அண்மைக் காலத்தில் மிக முக்கியமான சந்திப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. இருப்பினுங்கூட அந்தத் தலைவர்கள் மத்தியில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை காணப்படாமை காரணமாக அவ்வாறான சந்திப்புக்களால் மக்களுக்கு எவ்விதமான பயனும் கிடைக்காமலே போய்விட்டன என்பதை யாவரும் நன்கு அறிவீர்கள். அணு ஆயுதப்போரின் விளைவுகள் பற்றி சிந்தித்துப்பார்க்கவே முடியாமல் இருப்பதால் அணுஆயுதம் இவ்வுலகில் இல்லாமல் இருப்பின் உலகில் மிகவும் நன்றாக இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ளலாம்.

இன்று உலகில் இருக்கின்ற பல நாடுகளின் அரசாங்கங்களும் அணுஆயுத உற்பத்தியில் தத்தமது நாடுகளும் ஏன் ஈடுபடக்கூடாது என வேகமாகச் சிந்திக்கதொடங்கியுள்ளன. குறித்த நாடுகளின் எதிரி நாடுகள் எனக்கருதப்படுகின்ற அரசாங்கங்கள் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதால் நாமும் இவ்வாறான ஆயுத உற்பத்தியில் ஈடுபடல் வேண்டும் எனச் சிந்திப்பதில் தவறு இருக்கமுடியாததாகும்.

உலக சமாதானத்திற்கு அணுஆயுதத்தவிர்ப்பு மிகவும் இன்றியமையாததொன்று என்பது யாவரும் அறிந்ததே. இருப்பினுங்கூட உலகில் அணுஆயுதங்கள் இல்லையாகில் உலகம் எப்படி இருக்கக்கூடும் என ஒருகணம் ஆழமாக சிந்தித்துப் பார்ப்பது நன்றாக இருக்கும்.

அணுஆயுத தவிர்ப்பு மட்டும்தான் ஈற்றில் உலகில் சமாதானத்தை ஏற்படுத்த உதவுமா; உலகில் மனித சமுதாயத்தை கலக்குகின்ற பிரச்சனைகள் முடிவுக்கு கொண்டுவரப்படுமா?

சில சமயங்களில் அவ்வாறும் இருக்கக்கூடும். அணுஆயுதங்கள் யாவும் சீர்குலைக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டன என்று வைத்துக்கொண்டால் உலகில் சமாதானம் நிலைகொண்டுவிடுமா?

1914ம் ஆண்டில் அணு ஆயுதங்கள் இல்லை ஆனாலும்கூட ஓர் உலகப்போர் மூண்டது. அப்போரானது நான்கு வருடங்கள் நீடித்து பெரும் சேதங்களையும் அழிவுகளையும் ஏற்படுத்திக்கொண்டது. 25 கோடி மக்கள் முதலாவது மகாயுத்தத்தின்போது கொல்லப்பட்டனர். போர்தொடர்பாக எழுந்த பிரச்சனைகள் காரணமாக பஞ்சம். நோய் மற்றும் அரசியல் கொந்தளிப்பு போன்றவை தொடர்ந்தன. மக்கள் சொல்லவொண்ணாத துன்பங்களை அனுபவித்தனர்.

1939ம் ஆண்டின் கூட உலகில் அணுஆயுதங்கள் இல்லாமல் இருந்தன. இருப்பினுங்கூட இரண்டாவது உலகமகாயுத்தம் ஐரோப்பாவில் ஏற்பட்டது. அதன் மூலமும் 50 கோடி மக்களும், ராணுவமும் இறந்தன. அத்துடன் ஐரோப்பாவில் பல நகரங்கள் அழிவுற்றன. அதனைத்தொடர்ந்து 1945ம் ஆண்டில் அணுக்குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றன.

இக்காலகட்டத்தில் 14 வகையான போர்கள் வெவ்வேறு வகையில் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. மனிதவரலாற்றில் இந்நூற்றாண்டில்தான் வன்முறை அதிகரித்து வந்தது. வன்முறையானது நாடுகளுக்கிடையில் மட்டுமல்லாமல் தனிதனித குழுக்கள் மத்தியிலும் மிகவேகமாகப் பரவிக்கொள்கிறது.

மனித வரலாற்றின் வன்முறையானது ஒரு அம்சயாகவந்துகொண்டிருக்கிறது. அடக்குமுறை, கொடுமை குற்றம்; வஞ்சகம் போன்றவை மனிதனைவிட்டு இலகுவில் போகப்போவதில்லை. உலகில் அணு ஆயுதங்களை நாளைகூட இல்லாமல் செய்துவிட்டாலும்கூட மனிதனிடம் இருக்கின்ற இவ்வன்முறைக் குணங்களை இல்லாமல் செய்துவிடமுடியாது.

அணுஆயுதங்கள் ஏன் இன்றும் இருக்கின்றன. ஏனெனில் மனிதவர்க்கத்தினால் சமாதானத்துக்கான பாதைகளையும் வழிவகைகளையும் இன்னமும் கண்டுபிடிக்கமுடியாமல் இருப்பதனால்தான். மனிதன் தன் வீட்டாருடன் அயலவருடன் தான் வேலைசெய்கின்ற வர்களுடன் எவ்வாறு சமாதானமாக வாழலாம் என்பதையே இன்னமும் சரியாகக் கண்டுகொள்ளமுடியாதபடி வாழ்ந்துகொண்டிருக்கின்றான்.

மனிதன் உலகசமாதானத்திற்கு...முதலில் தான் தனது குடும்பம், சமூகம், கிராமம் சமுதாயத்துடன் முதலில் எவ்வாறு சமாதானமாக வாழமுடியும் என்பதைக் கற்றுக்கொள்ளவேண்டும். நாடுகளுக்கிடையிலான ஆயுதப்போட்டிகளைத் தவிர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சர்வதேசரீதியிலான ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்கின்றன. இருப்பினுங்கூட இவ்வாறான ஆயுதப்போட்டி தவிர்ப்பு ஒப்பந்தங்களால் ஏற்பட்ட பயன் யாவை என ஆழமாக சிந்தித்துப் பார்த்தல் மிக நன்றாகும். (8ம் பக்கம் பார்க்க)

# சிறுவர்மீது வன்முறை



உலகெங்கும் சிவில் யுத்தங்கள், பயங்கர வாதச் செயல்கள். குடும்பத்தில் நிகழும் வன்முறைகள் என்பனவற்றால் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் குழந்தைகளும், சிறுவர்களும் அண்மைக் காலத்தில் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளனர்.

இவ்வாறு பாதிப்படைந்த சிறுவர்களின் உணர்ச்சிகள், தேவைகள், உளவியல் ரீதியான தாக்கங்கள் என்பவற்றை ஆராய்ந்த விஞ்ஞானிகள் இவர்களை எவ்வாறு சிறப்பாகக் குணப்படுத்தலாம் எனக் கண்டறிந்துள்ளனர்.

சிறந்த முறையில் இச்சிறுவர்கள் கவனிக்கப்பட்டால், காலவோட்டத்தில் அனேகமானோர் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவர். ஆனால் உளரீதியாக ஏற்பட்ட வடுக்கள் குழந்தைகளின் உணர்ச்சி பூர்வமான வளர்ச்சியையும், திறன் வளர்ச்சியையும் வெகுவாய்ப் பாதிக்கும். மறைந்து போகும் சில நோய்க்குணங்கள் மீண்டும் சில வேளைகளில் தலைகாட்டும்.

இவ்வித பாதிப்புக்குள்ளான சிறுவர்களிடம் சில குறிப்பிடத்தக்க பொதுவான உளத்தாக்கக் குணம் குறிகள் காணப்படும். இவை உணர்வுகளைச் சிறிய அளவிலும் சிலவேளைகளில் தூரமாகவும் நீண்டகாலம் பாதிப்படையச் செய்யும். இவ்விதம் உளநலிவுற்ற சிறுவர்கள் சிறிதளவு சீண்டப்பட்டால் போதும் நீண்டகாலப் பாதிப்படைவர். இவ்வித ஆய்வுகளின் பின்பு உளநலிவுற்ற சிறுவர்களிடம் ஏற்படும் கடும் தாக்கங்கள், குழப்பங்கள் என்பவற்றைக் கண்டறியும் மனநோய் சிகிச்சை முறையில் மாற்றங்கள், வளர்ச்சிகள் காணப்பட்டுள்ளன.

உடலும் உள்ளமும், பயங்கரங்களால் ஒரே விதத்தில்தான் பாதிக்கப்படுகின்றன. ஓர் தந்தை அடித்தாலும் விளைவு ஒன்றுதான். இதுவே விஞ்ஞானிகளின் கூற்றாகும்.

தடுப்பு முகாம்களில் சித்திரவதைக்குள்ளானவர்கள், போர் அகதிகள் ஆகியோரை விஞ்ஞானிகள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தினர். பயங்கர வன்முறைகளின்போது பாதிப்படைபவர்களின் அருகில் ஓர் ஆறுதல் தரும் வளர்ச்சியடைந்த ஒருவர் இருப்பின் அவரால் அந்த பாதிப்பினை ஓரளவு தணிக்கமுடியும் என்று நம்பப்பட்டது. ஆனால் புதிய ஆராய்ச்சிகளின்படி பாதிப்படைந்தோரிடம் நீண்டகாலத் தாக்கங்கள் நிச்சயம் இருக்கும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஆறுதல் தருதல் யாராலும் முடியாததொன்றாகும்.

பன்னிரண்டு வயதானபோது கம்போடியநாட்டில் பட்டினி, அடி, உதை, உறவினர் கண்முன் சித்திரவதை, கொலை ஆகிய வேதனைகளைச் சில குழந்தைகள் அனுபவித்தனர். அவர்கள் இப்போது அடிக்கடி பயங்கரக் கனவுகளாலும் நித்திரையின்மையினாலும் அவதிப்படுகிறார்கள்.

எதிலும் தம்புலனைச் செலுத்துதல் என்பது அவர்களுக்குக் கடினமானது. அவர்கள் இலகுவில் திடுக்குற்று நடுங்குவார்கள். மனச்சோர்வு, சக்தியின்மை, எதிலும் பிடிப்பில்லாத் தன்மை என்பன அவர்களிடம் காணப்படும். எந்த வேளையிலும் தம்நிலைகண்டு பரிவு கொள்ளுதல், தாழ்வான சிந்தனை, என்றுமே தோல்வி மனப்பாங்கு என்பன இவர்களிடம் காணப்படும் இவ்வளவு உளரீதியான துன்பங்களின் மத்தியிலும் இவைபற்றி யாரிடமும் இவர்கள் எதுவும் கூறுவதில்லை.

உறவினர் யாவரும் வன்முறையினால் இறந்தொழிய நாம் மட்டும் ஏன் உயிருடன் இருக்கின்றோம் என்னும் ஓர் வெட்கம் இவர்களிடம் குடிகொண்டிருக்கும். இவ்வித உணர்வு பாரிய வன்முறை அழிவுகளில் இருந்து தப்பியோரிடம் எங்கும் காணப்படுவதுண்டு.

அவர்களின் வாழ்க்கைச் சூழலும் உளவியல் பிரச்சினைகளும் நெருங்கிய தொடர்புடையவை. கலகங்களின் பின்பு பெற்றோர் உறவினருடன் மீண்டும் சேர்ந்துகொண்டவர்கள் குறைந்தளவே உளவியல் பாதிப்பினை அடைந்துள்ளனர்.

அனாதை விடுதிகளிலும் அகதி முகாம்களிலும் வசித்தோர் கூடுதல் பாதிப்படைகின்றனர். தாம் பற்றிக்கொள்ள யாரும் உண்டென்று எண்ணும் சிறுவர்கள் விரைவில் தேறிவிடுகின்றனர்.

போர்க்காலத்தில் நிலவும் சமூக நிலையும் சிறுவர்களின்மீது பெரும் தாக்கத்தினை உண்டுபண்ணக்கூடியதாகும். அயர்லாந்தில் கத்தோலிக்கச் சிறுவர்கள் அங்குள்ள பொலிஸ், பாராமிலிற்றறித் துருப்புகள் என்பன தம்மைத்தாக்கவே வருவ

# ...த் தாக்கமும் சிகிச்சைகளும்

தாக எண்ணிக் கவலைப்படுவர். இதனால் பாரிய உளவியல் தாக்கத்தினால் அவர்கள் அவதியுறுவர். ஆனால் புரட்டாஸ்தாந்து அகதிக் குழந்தைகள் படையினரைக் கண்டு அஞ்சுவதில்லை. தாம் படையினரால் நன்கு பாதுகாக்கப்படுவதான உணர்வை அவர்களிடம் காணமுடியும்.

இலங்கையிலும் தமிழ் அகதிக் குழந்தைகளுக்கும் சிங்கள அகதிக்குழந்தைகளுக்கும் இடையிலான இந்த வேறுபாட்டினை நாம் அவதானிக்கலாம்.

விஞ்ஞானிகள் போர் அரக்கர்களின் பிடியில் உள்ள பெய்ரூட், அயர்லாந்து ஆகிய பிறதேசங்களில் சில ஆய்வுகளை மேற்கொண்டனர். சிறுவயதில் போர் பீதியினால் அவதியுற்றவர்கள் வளர்ந்ததும் மிக இலகுவில் போர்வீரர்களாக மாறுயுள்ளதை ஆய்வுகள் காட்டுகின்றன. மற்றும் சிலர் வன்முறையாளராக மாறுகின்றனர்.

வன்முறையினால் உண்டாகும் அச்சஉணர்வு குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது வன்முறைச் சக்தியாக மாறுகிறது. இவ்விதமே பல சிறுவர்கள் ஈற்றில் அயர்லாந்து குடியரசுப்படையில் சேர்ந்துள்ளனர்.

---

**தமிழில் ஐ. கணேசன்**

---

இந்த இயக்கம் ஓர் கத்தோலிக்கக் குழந்தை சட்டபூர்வமாக தனது ஆத்திரத்தையும், கோபத்தையும் வெளிக்காட்டுவதற்கானதோர் வடிகாலாக விளங்குகின்றது. தனது துன்பங்களுக்குக் காரணமாயிருந்தவர்களுக்கு எதிராகத்தான் இயங்கி அவர்களுக்கு அழிவை உண்டுபண்ணுவதாக பழிவாங்குவதாக இச்சிறுவர்கள் பின்பு உணர்ந்து தமது வன்முறைகளை நியாயப்படுத்துகிறார்கள்.

மத்திய அமெரிக்கா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு ஆகிய நாடுகளில் எட்டு வயதான சிறுவர்களும் போர்வீரர்களாகப் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். இவர்கள் மீதான நீண்டகால தாக்கங்களும் மிகவும் கொடூரமானவையாகும். மிக இள வயதில் விடுதலை இயக்கங்கங்கள், புரட்சி இயக்கங்கள் என்பவற்றில் பங்கு கொண்டு பல கொலைகளையும், வன்முறைச் செயல்களையும் செய்தவர்கள் மீண்டும் புனர்வாழ்வு பெறும்போது மற்றைய சாதாரணமக்களோடு இசைந்து வாழ்வதில் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். பொதுமக்களிடம் இருந்து அவர்கள் பிரிந்து காணப்பட்டனர். தாம் செய்த கொலைகளுக்காகக் கழிவிரக்கப்படுதலும், அச்சம் கொள்ளுதலும் இவர்களுக்கு இயல்பானது.

வயது வேறுபாட்டிற்கேற்ப இச்சிறுவர்களின் உளவியல் பிரச்சினைகளும் வேறுபடும் என்பதையும் ஆய்வுகள் காட்டுகின்றன. துர்நடத்தை, கல்விக் கூடங்களில் ஒழுங்கீனம், போதைவஸ்துகளுக்கடிமையாதல். பாலியியல் குற்றங்களில் ஈடுபடல், மற்றும் ஒட்டு மொத்தமாக சகல குற்றங்களையும் இச்சிறுவர்கள் புரிவார்கள்.

மேலும், அச்சுறுத்தல்களின் மத்தியில் எவ்வித பாதுகாப்பும் இன்றி தவித்த ஐந்து வயதுக் குட்பட்ட சிறுவர்களிடம் பின்னடைவுகள் தோன்றும். மிகச்சிறுவயதில் இருதயநோய்க் குணங்கள் தலைகாட்டும். உதாரணமாக படுக்கையில் மீண்டும் சிறுநீர் கழித்தல், மலங்கழித்தலில் ஒழுங்கீனமும் அவஸ்தையும், அந்நியர்களைக்கண்டு அதிகம் பயம் கொள்ளுதல், பெற்றோரை விட்டு ஒருநிமிடமும் பிரிந்திருக்க முடியாமை, பேசும் ஆற்றலைப் படிப்படியாக இழத்தல் என்னும் மிகவும் ஆபத்தான விளைவுகள் இச்சிறுவர்களுக்கு உண்டாகும்.

சில சமயங்களில் வன்முறைச் சம்பவங்களைக் கண்ட சிறுவர்கள் பேசும் சக்தியையும் இழந்து விடுவதும் உண்டு. நித்திரையில் நடத்தல், பயங்கரக் கனவுகள் காணுதல், கதறிக்கொண்டு விழித்தெழுதல் என்பன போன்ற நித்திரை வியாதிகளும் இவர்களிடத்தில் காணப்படும்.

சில குழந்தைகள் தாம் கண்ட வன்முறை நிகழ்வுகளை மீண்டும் நடித்துக்காட்டும் துன்பியல் விளையாட்டில் தொடர்ந்து ஈடுபடுபவர். இதனால் அந்த வன்முறை நிகழ்வினை மறக்கமுடியாது தவிப்பர். மீண்டும் நடித்துக்காட்டும் இம்முறை இச்சிறுவர்களுக்கானதோர் சிகிச்சைமுறையாக வளர்ச்சியடைந்துள்ளது என்பது அதிஷ்டவசமானதாகும்.

ஓர் சிறந்த சிகிச்சையாளரின் உதவியுடன் மீண்டும் குழந்தை அந்த நிகழ்வின் கொடுமையை எதிர்கொண்டு சமாளித்து அதற்கப்பால் முன்னேறி வெற்றி கொள்வதாக இது அமையும்.

இச்சிறுவர்களுக்கு குறிப்பிட்டுச் சொல்லும் படியான தனியொன சிகிச்சைமுறை இன்னும் இல்லை ஆயினும், இது தொடர்பான இடைவிடாத ஆய்வுகள் புதிய புதிய சிகிச்சை முறைகளை எமக்களிக்கின்றன. சிகிச்சையின் பின் இச்சிறுவர்கள் மீண்டும் புனர்வாழ்வுபெற்று வாழ்க்கையில் பிடிப்போடும் நம்பிக்கையோடும், அன்போடும், உறுதியாகவும், ஆக்கபூர்வமாகவும், இயங்க முடியும் என நவீன ஆய்வுகள் விளக்குகின்றன.

# இரு கேள்விகளும் பதில்களும்

**கேள்வி: நிம்மதி என்பதன் பொருள் என்ன?**

பணம் இல்லாத ஒருவர் பணம் இருந்தால் நிம்மதியாக இருக்கலாம் என்று நினைக்கிறார். பதவி இல்லாத ஒருவர், அதிகாரம் கிடைத்தால் நிம்மதியாக இருக்கலாம் என்று நினைக்கிறார்.

இதுபோலவே அவரவர் நிலைக்கு ஏற்ப, இன்னது கிடைத்தால் நிம்மதியாக இருக்கும் என்று நினைக்கிறோம். பணம், பதவி போன்றவற்றை பெற்றிருப்பவர்கள் நிம்மதியாக இருக்கிறார்களா என்று கூர்ந்து ஆராய்ந்தால் இல்லை என்ற உண்மை தெரியவரும். தமிழில் ஆசை, விருப்பம் என்று இரண்டு சொற்கள் உள்ளன. ஆசை என்பது தாழ்ந்த விஷயங்களில் மனம் ஈடுபடுவதைக் குறிக்கும். உதாரணம், பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை, உலகஆசை முதலியன.

விருப்பம் என்பது உயர்ந்த விஷயங்களில் மனம் ஈடுபடுவதைக் குறிக்கும். உதாரணம் அறஞ்செய விரும்பு. ஆசைப்படப்பட துன்பம் மிகும். ஆசையை விடவிட ஆனந்தம் மிகும்.

ஈசனோடாயினும் ஆசையறுமின் என்பதற்கு உலகச் சுகங்களுக்காக இறைவனை நாடாதே என்பதே பொருள். உலக ஆசைகள் அப்போதைக்கு இன்பம் தருவதுபோல தோன்றினாலும் முடிவில் அது துன்பத்தைத்தான் தரும் என்பது சர்வ நிச்சயம்.

ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறினார் புத்தர், பச்சிளங் குழந்தை நிம்மதியாக இருக்கிறது. ஏனென்றால் அதனிடம் உலக ஆசைகள் இல்லை, எனவே உலக ஆசைகள் குறையத்தான் வாழ்க்கையில் நிம்மதி அதிகரிக்கும்.

மானின் உடலிலேயே கஸ்தூரி இருக்கிறது அதைப் புரிந்துகொள்ளாததால் மான் கஸ்தூரியை வெளியே தேடி அலைகிறது. அதைப்போல் நிம்மதியும் ஆனந்தமும் உண்மையில் மனிதனுக்குள்ளேதான் இருக்கிறது, அதைப் புரிந்துகொள்ளாததால் வெளியுலகில் மனிதன் நிம்மதியைத் தேடி அலைகிறான்.

**கேள்வி: மன்னிப்பு, கண்டிப்பு, தண்டிப்பு. தவறு செய்தவனைத் திருத்த இவற்றில் எதைக் கையாளலாம்?**

தண்டனை இல்லையானால் சமுதாயம் சிறைந்து போகும். குற்றத்திற்காக தண்டனையை விதித்தே தீரவேண்டும். எல்லா நிலைகளிலும் மன்னிப்பது ஏற்புடையது அல்ல. தனிப்பட்ட குற்றம் செய்தவர்களைத் திருத்துவதற்குரிய வாய்ப்பிருந்தால் மன்னிக்கலாம், ஆனால் அவர்கள் மறுபடியும் அதே குற்றத்தை செய்யக்கூடாது. தவறு செய்வது மனித இயல்பென்றும், மன்னிப்பது தெய்வ "இயல்பென்றும் ஒரு பழமொழி இருக்கிறது, கண்டிப்பு இல்லையானால் ஆட்சியும், அரசும் செயல்பட இயலாது, சட்டத்தைக் கண்டிப்புடன் "நிறைவேற்ற வேண்டும். சட்டம்தான் சமுதாயத்தின் பாதுகாவல். பொதுவாக ஏழைகள் குற்றம் செய்கிறபோது ஓர் உரைகல்லை வைத்துப் பார்க்கவேண்டும். குற்றம் செய்யத் தூண்டியது ஆசையா, தேவையா? பேராசையினால் செய்யப்படும் குற்றங்களுக்கு கொடுமையான தண்டனை தரப்படவேண்டும், சலுகையோ மன்னிப்போ இருக்கக்கூடாது, பொதுவாக குற்றத்தைப் பற்றி கலீல் கிப்ரான் என்னும் பேரறிஞன் சொல்வதை எண்ணிப்பார்க்கவேண்டும். ஒரு மரத்தில் இலைகள் பழுத்தால் அந்த மரத்திற்கு தெரியாமல் பழுப்பதில்லை. அதுபோல சமூகத்தில் நடக்கும் குற்றங்களுக்கு நாமே பொறுப்பாளிகள் என்பதையும், நமது அரசியல் சூழ்நிலைகளுமே காரணம் என்பதையும் ஒப்புக்கொண்டாகவேண்டும்.

(9ம் பக்கம் பார்க்க)

## அணுஆயுதமும் சமாதானமும்......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு நாற்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டன. இவ்ஸ்தாபனத்தின் நாற்பது வருடகால முயற்சி எப்பலனைக் கொடுத்துள்ளது, ஐந்து நாடுகள் இணைந்து அணுஆயுதக்கழகத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளன. இக்கழகத்தில் மேலும் நாடுகள் இணையக்கூடும். வரலாற்றில் இல்லாததுபோல் அணுஆயுத உற்பத்தியில் இன்று பல பல கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டு வருகின்றது அதேவேளை பசி, பஞ்சம், பட்டினி கல்விவாய்ப்பின்மை வேலைவாய்ப்பின்மை மருத்துவவசதி வாய்ப்பின்மை என்பன தொடர்கதையாகிக்கொண்டு போகின்றன.

இன்றைய செய்தித்தாள்களை காலை வேளையில் எடுத்துப்பார்க்கின்றபோது போர்பற்றியும் போர் வதந்தி பற்றியுமான தலைப்புச் செய்திகளே காணப்படுகின்றன

இவ்வாறான செய்திகள் மூலம் மக்கள் குழப்பமும் பீதியுமடைகின்றனர். மனித சமுதாயத்தினை இன்று எதிர்நோக்கக்கூடிய பிரச்சனைகளை அணுஆயுதங்களினால் தீர்வுகண்டுவிடமுடியாது. அத்தோடு குறுகியகால நீண்டகால ஒப்பந்தங்களோ அல்லது உடன்படிக்கைகளோ மனித சமுதாயத்தினை எதிர்கொள்கின்ற பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள மாட்டா.

மனித சமுதாயத்தின் வாழ்வுக்கும், அமைதிக்கும் உலகில் நிரந்தரமான சமாதானம் மிக விரைவில் காணப்படுதல் வேண்டும், அச்சமாதானம் ஆயுதப்போட்டி, ஆயுதக்குவிப்பு மற்றும் அணுஆயுத உற்பத்தியினால் ஏற்பட்டுவிடாது.

மக்கள் சமாதான நோக்கோடும் அறிவோடும் வாழப்பழகிக்கொள்ளவேண்டியது மிக முக்கியம். சமாதானம் என்பது மனிதனைத்தேடிவரும் ஒரு பொருள் அல்ல; சமாதானத்தை மனிதன் நேசிக்கவேண்டும் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டும். தனிமனித சமாதானம்தான் முழுமனித சமுதாயத்தின் சமாதான சகவாழ்வுக்கு அத்திவாரமிடும்,

எனவே சமாதானத்தின் அதிமுக்கியமான தத்துவங்களை நாம் கிராமம் கிராமமாக மக்களுக்கு கல்வி மூலம் புகட்டவேண்டும்.

# சுன்ணாகம் ஸ்கந்தாவில் காந்தி உரை

இன்று உங்கள் வித்தியாசாலேக்கு நான் சமுகம் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தமைபற்றி மிக மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்களேச் சந்திப்பதென்ருல் எப்போதும் எனக்கு அளவுகடந்த சந்தோஷம். கபடமற்ற இளேஞராகிய உங்களுடைய உள்ளங்களில் நல்வார்த்தைகள் நன்கு பதியும் தன்மையன. உங்கள் தலைமை ஆசிரியரும் உதவியாசிரியரும் இங்கே என் பக்கத்தில் இருக்கின்ருர்கள், அவர்களுடன் உங்கள் வித்தியாசாலேயின் தாபகரும்கூட நிற்கின்ருர். இக்கல்விக்கழகம் உண்மையான கல்வியை உங்கட்கு அளிக்குமாயின் அதுவே பெரியபேருகும். கல்வி கற்பதோடு நில்லாமல் கற்றபடி ஒழுகவும் பழகிக்கொள்ள வேண்டும். மாணவரென்போர் தந்தை தாயார், ஆசிரியர் என்போருக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் நல்வார்த்தைகளே தேவவாக்காகக்கொண்டு நடக்க வேண்டும். இளம்பருவத்தில் நாம் கற்றுப் பழகுவன ஒருபோதும் நம்மை விட்டு நீங்கா, தாய் தந்தையர் ஆசிரியர் நமக்களிக்கும் புத்திமதிகள், கட்டளேகள் சிறுவயதினராய் இருக்கும்போது சிலபோது கசப்பாய் இருக்கும். அவைகளே ஏற்காமலும் விடலாம். ஆனல், வாழ்க்கையில் மிக்க அனுபவம் படைத்த அவர்களுடைய வாக்குகள் உபதேசங்கள் எவ்வளவு உண்மையானவை என்பது வயதுமுதிர்ந்த பின்தான் தெரியும் எல்லாவற்றிற்கும் முதலாவதாக, நீங்கள் கடவுள் பக்தியுடையவர்களாக வாழ முயலவேண்டும் அப்போதுதான் உங்கள் மாட்டு நல்லொழுக்கம் பெரிய ஆபரணமாக கிடைக்கும். சத்தியத்தை ஓம்பிக் கடைப்பிடிக்க வல்லவராக வேண்டும். சத்தியத்தை மேற்கொள்பவர்களே எவ்வித தீங்குகளும் தீமைகளும் வந்தணுகமாட்டா.

கல்வி கற்பதோடு நில்லாது சமுதாயத்தின் முன்னேற்றத்தை நாடித் தொண்டுகள் செய்யவும் இளம் பருவத்திலேயே பழகிக்கொள்ளவேண்டும். இப்போது நான் இலங்கைக்கு வந்தது கதர் இயக்கத்திற்கு பணம் சேர்ப்பதற்காகவே. இந்தியாவில் கோடிக் கணக்கான ஏழை மக்கள் நேரத்திற்கு உண்ண போதிய உணவின்றியும் உடுக்கத் துணியின்றியும் வருந்துகின்ருர்கள் என்பதை நான் உங்கட்கு சொல்ல வேண்டியதில்லே. அவர்களுடைய வறுமையை ஒழிப்பதற்கே இந்தக் கதர் இயக்கத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். பஞ்சிலிருந்து நூல் நூற்றுக் கதர்ப்புடைவைகள் நெசவு செய்வதால் அவ்வேளே மக்களின் பொருளாதாரம் உயர்வடையும் என்பது எனது பூரணமான நம்பிக்கை. நீங்கள் இன்று அளிக்கும் காணிக்கை இப்புனிதமான தொண்டுக்கே செலவு செய்யப்படும். எல்லா மக்களும் கையினுல் நெசவு செய்யப்பட்ட கதராடைகளேயே அணிவதென்று உறுதிசெய்துகொள்வராயின் இப்பொருளாதார இயக்கம் நாட்டிற்கும் மக்கட்கும் பெரும் நன்மை வருவிக்கும் என்பதில் ஐயமில்லே; மாணவர்களாகிய நீங்கள் இந்தப் பெரிய தொண்டுக்கு பணஉதவி செய்ததுடன் திருப்தியடையாது கதர்ப்புடைவைகளேயே உபயோகிக்க உடன்படவேண்டும்.

அப்போதுதான் கதர் இயக்கம் வளர்ச்சியடைந்து ஏழை மக்களின் வாழ்வு சிறக்கும். நீங்கள் மாத்திரமல்ல உங்கள் வீடுகளில் வசிக்கும் பெண்மணிகளும் கருணேயுடன் கதர் ஆடைகளே உபயோகிக்க முன்வரவேண்டும். மேலும் நான் கூறுவது என்னவென்ருல் நல்லொழுக்கமும், கடவுள் பக்தியும், கீழ்ப்படிவுமே உங்களே மேல்நிலேக்கு கொண்டுவர வல்லன. உயரிய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாசாலே வளர்ச்சியடைந்து நாளடைவில் நாட்டுக்கு பெரும் நன்மையை பயக்கவேண்டுமென்று நான் கடவுளே பிரார்த்திக்கின்றேன் நீங்கள் மனமுவந்து இந்தியாவிலுள்ள ஏழை மக்களின் பொருட்டு அன்புடன் அளித்த காணிக்கைக்கு மறுபடியும் எனது தாழ்மையான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

# வாழ்க்கை ஒரு போராட்டம்

வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் தான்! போராட்டம் என்றபோது வெற்றிக்காகப் போராடுகின்றவர்கள் என்பதன் பொருள் தானே விளங்குகின்றது.

தோல்வி வரும்—தோல்வி தான் என்று போராடுகின்றவர்களேப் பார்க்கமுடியுமா?

பிறந்துவிட்டோம்! போராட்டத்தில் இறங்கி விட்டோம்? நமது குறிக்கோள் வேற்றி! அந்த நம்பிக்கை நமக்கு வேண்டும்.

## இருகேள்விகளும் ...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவாக மன்னிப்பதோ, தண்டிப்பதோ, 'இவை இடத்திற்கு தகுந்தமாதிரி சூழ்நிலேக்கேற்றவாறு முடிவு செய்யப்படவேண்டிய நெறிகளாகும்.

சமூக குற்றங்கள் செய்பவர்க்கு மன்னிப்பே கிடையாது, பொதுவாக நீதித்துறையிலே ஒரு விதி இருக்கிறது. பல குற்றவாளிகளே விட்டுவிடலாம், ஆனல் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது.

அசுவத்தாமாகவறதா என்று தருமர் போர்க்களத்தில் சொன்ன பொய்க்காகக் கொஞ்சநேரம் அவருக்கு நரகதண்டனே கிடைத்தது. அவருக்காக கிருஷ்ணபகவான்கூட வாதாட முன்வரவில்லே. செய்த தவறுக்கு தண்டனே, இதில் நான் ஒன்றும் செய்யமுடியாது என்று கைவிரித்துவிட்டார். குற்றத்தில் இருந்து யாரும் தப்பிக்கமுடியாது என்பது இதன் உள்ளர்த்தம். குற்றம் செய்தவனேப் பகவானே கைவிட்டுவிட்டார் என்பது இந்த நிகழ்ச்சியின் பொருள்.

# செய்திச்சரம்

★ யாழ்நகரில் சேதங்களைப் பார்க்கச்சென்ற இந்திய பிரதிநிதிகள் கோட்டையின் வேட்டினால் திரும்பி ஓடினர்,

★ யாழ்ப்பாண மக்களுக்கு உணவுப்பொருட்கள் ஏற்றி வரும் இந்தியக்கப்பல்கள் 5 நாளுக்கு ஒன்று என்ற முறையில் வரும்.

★ கொழும்புத்துறை புனித வளனர் குருமட அகதிகள் முகாமில் இருந்து சுமார் 300 அகதிகள் குடும்பங்களுக்கான உணவு விநியோகத்தை கப்டன் குப்தா ஆரம்பித்து வைத்தார்.

★ இந்திய அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்திய நிவாரண உதவிப்பொருட்கள் முகாங்களில்தங்கியிருந்த அகதிகளுக்கே முதலில் கொடுக்கப்படும்.

★ யாழ் குடாநாட்டில் 3வது இராணுவ நடவடிக்கைக்கு தயாராகுமாறு இணைப்பதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

★ யாழ் குடாநாட்டில் இந்தியா உணவுப்பொருள் அனுப்பிய பின்பே யாழ்ப்பாணத்தில் பொருளாதாரத்தடை நீக்கப்பட்டது என திரு. ராஜீவ் காந்தி கூறினர்.

★ இந்திய உணவுக்கப்பல் நிவாரணப் பொருட்களுடன் காங்கேசன்துறை துறைமுகத்தில் 5 நாட்கள் நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர் உணவுப் பொருட்கள் இறக்கப்பட்டன.

★ இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக எந்தவொரு அந்நிய நாட்டின் அச்சுறுத்தல்களையும் கண்டு இந்தியா அச்சமடைய மாட்டாது என்று திரு. ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.

★ இலங்கை இராணுவத்தைவிட அதிகளவு பயிற்சி பெற்றதாக கூறப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைக் சேர்ந்த வாலிபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மூன்றரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

★ தமிழ் பொலிஸ் ஊழியர்கள் வடமராட்சிப் பகுதியில் ஆயுதமின்றி சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

★ இலங்கையில் வறட்சியால் வாடும் மக்களுக்கு அமெரிக்காவிடம் உதவிகோரிய இலங்கைக்கு 20,000 மெற்றித்தொன் கோதுமைகளை நிவாரண உதவியாக வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

★ இராணுவ நடவடிக்கையின்போது மாவிட்டபுரம், ஊறணி, காங்கேசன்துறை ஆகியபகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் வீடுகளுக்குச் சென்றபோது வீடுகள் அனைத்தும் தரை மட்டமாக இருப்பதைக் கண்டு ஏமாற்றத்துடன் திரும்பினர்.

★ இந்திய இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் வடமராட்சி பகுதியில் 'ஒப்பிரேசன் லிபரேசன்' நடைபெற்ற பகுதிகளை பார்வையிட்டனர்,

★ இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக பேச்சுவார்த்தைகள் குறித்து இனப்பிரச்சனை தொடர்பான பதிலை இந்திய அரசு எதிர்பார்க்கின்றது.

★ வடமராட்சிப்பகுதியில் கைதான யுவதிகள் காலியில் தடுத்துவைக்கப்பட்டனர் என தெரியவருகிறது.

★ இந்திய உணவுப்பொருட்களை யாழ் மக்கள் வேண்டாம் என்று கூறும்வரை இந்திய உணவுப்பொருட்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும் என ரஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்,

★ இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களை விடுதலை செய்யக்கோரியும்.

★ பாடசாலைகள் இராணுவ முகாம் ஆக்கப்படுவதைக் கண்டித்தும் பாடசாலை மாணவர்கள் மாபெரும் ஊர்வலம் நடாத்தினர்,

★ நெல்லியடி மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவமுகாமை புலிகள் இயக்கத்தின் விசேட அதிரடிப்படையினரான கரும்புலிகள் தகர்த்தனர், இதனால் பல இராணுவத்தினர் மாண்டுள்ளனர்.

★ ஸ்ரீலங்கா இராணுவம் இந்து ஆலயங்களை தாக்குதல் நடத்தி அழிப்பதை காஞ்சி காமகோடி பீடாதிபதி வன்மையாக கண்டித்துள்ளார்.

★ கடந்த பத்து வருடகால ஆட்சியில் விரக்தியடைந்த அமைச்சர் வின்சன் பெரேரா தனது பதவியை இராஜினமாச் செய்துள்ளார்,

★ தேர்தல்களைத் தொடர்ந்து வழமையாக நடைபெற்றுவரும் இனக்கலவரங்களைப் போன்று இம்முறையும் அவிசாவளைப் பகுதிவாழ் தமிழ் மக்களை அவர்களது வதிவிடங்களில் இருந்து வெளியேறுமாறு சிங்களவர்களால் அச்சிடப்பட்ட பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா அரசின்

# கண்மூடித்தனமான கொடிய செயல்களைக் கண்டிக்கிறோம்!

தமிழ் இனத்தின் சுதந்திரத்துக்கும் விடுதலைக்குமாக தியாக உணர்வுடன் போராடிக் கொண்டிருக்கின்ற தமிழீழ விடுதலைப் போராளிகளைத் தமிழ் மண்ணிலேயே அழித்து ஒழிக்கும் நோக்குடன் மே மாதம் பிற்பகுதியிலும், இம்மாதம் முற்பகுதியிலும் ஸ்ரீலங்கா அரசு யாழ்ப்பாணக் குடாநாட்டில் மூர்க்கத்தனமாக மேற்கொண்டிருந்த கண்மூடித்தனமான கொடுமைகள், கொலைகள், அழிப்புக்களையிட்டு நாம் மிகவும் விசனமடைகின்றோம்.

இவ்வகையான சகல கொடிய செயல்களையும் நாம் கண்டிக்கின்றோம்,

ஒரு இனத்தின் மக்களை அழிப்பதன் மூலம் அந்த இனத்தின் விடுதலைத்தீயை இலகுவில் அணைத்துவிடமுடியாது!

மனிதநேய மிக்கவர்களால் தாங்கிக் கொள்ளமுடியாத வேதனைகள்! இழப்புக்கள்!!

வடமராட்சிப் பகுதியில் அரசின் கூலிப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட மிகக் கொடூரமான செயல்கள் ஒன்றா? இரண்டா? ஆயிரமாயிரம்!

'ஒப்பரேசன் லிபரேசன்' போர்வையில் கொல்லப்பட்டவர்கள் எத்தனையோ பேர்! தமிழ் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டு விட்டன! தமிழரின் கலாசாரம் சீர் குலைக்கப்பட்டுவிட்டது.

குடாநாட்டில் வீட்டுக்கு வீடு மரண ஓலங்கள் 'கேட்கின்றன'. வரலாறுகூடக் கண்டிராத சோக காவியங்கள்! கண்ணீர்க் கதைகள்!! நெஞ்சை நெகிழ வைக்கும் சம்பவங்கள்!!!

இருவார காலமாகத் தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட இன ஒழிப்புப் பணியில் தமிழ் மக்களின் கல்வி—கலை—கலாசார—பொருளாதாரம் மழுங்கடிக்கப்பட்டுவிட்டது. கூடவே தமிழ் மக்களின் மனோநிலையிலும்—உள வளர்ச்சியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை துயரம் தருவதாகவுள்ளது.

---

## வடக்கிலும் கிழக்கிலும் 79 அகதிகள் முகாம்கள்

வட—கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென 79 அகதி முகாம்கள் இயங்குகின்றன. இம்முகாம்களை கிராமிய பொது, மற்றும் தொண்டர் ஸ்தாபனங்கள் நடாத்திவருகின்றன. இந்த முகாம்களில் 43,823 பேரைக்கொண்ட 9,913 குடும்பங்கள் அகதிகளாக உள்ளன. இவற்றினைவிட வெளியே 82,344 குடும்பங்கள் அகதிகளாக வுள்ளனர்.

---

## அன்பு கொள்!

மனிதனது சொத்துக்களாகக் கருதப் படுவன அவனது குணநலன்கள்தான். நல்ல குணநலன்கள் பெறுதவன் எவை பெற்றும் எதுவும் பெறுதவனுகவே கருதப்படுகிறான். வாழ்வில் அன்பு செலுத்துகின்றவர்களை மனிதன் சந்திக்கின்றபொழுது உண்மையான மகிழ்ச்சியடைகிறான்.

மனிதனுக்குத் தொல்லைகள் மிக அமைவது எப்பொழுது தெரியுமா? அன்பில்லா மனதைப் பெறுகின்ற பொழுதுதான். அன்பில்லா நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபொழுது தான்.

அன்பிற்கு அளவில்லை. அன்பிற்கு அடைவுமில்லை. அன்பில்லா மனமும் அன்பு காட்டத் தெரியாத மனமும் சிறப்படைவதில்லை!

# அறவழி

NONVIOLENCE

# வாழவேண்டிய வயதில் வாழ்விழந்து வாழ்வதா?

## நாய்களும் காகங்களும் மனித உடலைப் பங்கு போட்டன!

### வடமராட்சியில் இருந்து கிடைத்த கண்ணீர்க் கடிதம் கூறும் சோகக்கதை!

வடமாரட்சிப் பகுதியில் இராணுவத்தினர் இப்பொழுது தமது ஆட்சியை நிலைநாட்டியுள்ளனர். 25—5—86ல் எமது கிராமங்களை விட்டு அகதிகளாகப் புறப்பட்டு எமது உயிர்களைக் காப்பாற்றுவதற்காக எமது கிராமத்திற்கு அண்மையில் உள்ள கோயிலில் தஞ்சமடைந்தோம்.

25ம் திகதி இரவு வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் கோயிலில் இருந்தவர்கள் சிலருக்குப் பட்டு இறந்தும், காயமடைந்தும் இருக்கின்றனர். மறுநாள் காலை 4 பொம்பர், 2 ஹெலிகொப்டர் 2 அவ்ரோ விமானங்கள் எமது பகுதியை முற்றுகையிட்டுக்கொண்டிருந்தன.

குழந்தைகள் பசியால் வாடினர். மடிந்தனர். எங்கு பார்த்தாலும் ஒரே அவலக்குரல், ஐந்து நாட்களுக்கு சாப்பாடு இல்லை, தண்ணீர் குடித்து தமது உயிர்களைக் காப்பாற்றினார்கள். சிலர் பசியால் மடிந்தனர்.

இப்படி எத்தனை பரிதாப நிலை. இப்படி இருக்கையில் 29—5—87ம் திகதி அன்று எமது பகுதியை இராணுவத்தினர் முற்றுகையிட்டபோது ஆயிரக்கணக்கான மக்கள் இராணுவத்தின் கெடுபிடிக்கு இலக்காகி உயிர் இழந்தனர். அதிலும், எமது பகுதியை மிகவும் மோசமான நிலைக்கு இராணுவம் தாக்கியுள்ளது.

இப்பொழுது வாழவழியில்லாமல் வீடு வாசல் உடைமைகளை இழந்தும் எத்தனையோ. எத்தனை தாய்மார்கள் வாழவேண்டிய வயதில் வாழ்விழந்து வாழ்வதா? அல்லது சாவதா? என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

29—5—87ம் திகதி மாலை நான்கு மணியளவில் இரணுவத்தினர் எமது கிராமத்துக்கு வந்தார்கள் எமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இலட்சக்கணக்கான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் உள்ளன.

அன்று தினம் எமது கிராமப் பகுதியில் இருந்து எத்தனையோ பேரைச் சுட்டுக்கொன்றனர். எத்தனையோ பேர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார்கள். உயிரோடு வைத்து, கை, கால் வெட்டி, அடி, உதைகளினாலும், அச்சத்தினாலும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

மரணமடைந்தவர்களை அடக்கம் செய்யவும் இந்தக்கொடியவன் விடவில்லை. நாய்களும், காகங்களும் இவர்களின் உடலை பங்கு போட்டன.

எங்கு பார்த்தாலும் ஒரே அழுகைச்சத்தம். எத்தனையோ பேர் காணாமல் போய்விட்டார்கள். என்னுடைய கிராமத்தில் பலபேரைக் காணவில்லை. என்னுடைய குடும்பத்தில் அப்பா. அண்ணா, மாமாக்கள் ஐந்துபேர் இறந்தும் காணமலும் போய்விட்டனர்.

இராணுவம் தன்னுடைய ஆதிக்கத்தினால் எத்தனையோ பெண்களை கற்பழித்தும் சுட்டும் கொன்றது. எம்மையெல்லாம் நாளுக்குநாள் சித்திரவதை செய்கின்றார்கள். வீடு வீடாகத் தேடுதல் செய்கின்றார்கள்,

எங்களுடயை வீட்டுக்கு வந்து என்னை வரும்படி சொன்னார்கள், நான் போகவில்லை. என்னை ''பெண் கொட்டியா'' என்றுசொன்னார்கள். அதற்குள் வந்த கொமாண்டர் என்னைக் காப்பாற்றிவிட்டார். அன்று ஏற்பட்ட நடுக்கம், அச்சம் இன்னமும் தீரவில்லை.

இங்கு ஒரு நிமிடம்கூட நிம்மதியாகக்கழிக்கமுடியவில்லை, இப்படியான வாழ்வை வாழ்வதிலும் மருந்து குடித்து எமது உயிரைவிடுவது எவ்வளவோ மேல் என்று நினைத்து நாளுக்கு நாள் சாகின்றோம்.

சாப்பாடில்லாமல் இறந்துவிடுவோம், எமது உயிருக்கு உத்தரவாதம் இல்லை. வாழ வழியின்றித் தவிக்கின்றார்கள் வடமராட்சி மக்கள்.

இப்படிக்கு: வாழ வழியின்றித் தவிக்கும்
அன்புச் சகோதரி.

வடமராட்சி.

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினால், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987 ஆடி 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.